THIRU T. MARTIN : Sir, I am giving only an illustration...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இல்லஸ்ட்ரேஷனே கூடாது.

திரு. டி. மார்டின் : செயிண்ட் ஜோசப் கல்லூரியில் இருக்கின்ற முறைப்படி மற்றக் கல்லூரிகளிலும் சொந்தமாக விளைநிலங்கள் வைத்து அந்த விதமாக அதிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களை விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு உணவு கொடுக்கக்கூடிய நிலைமை இருப்பதைப்போல், இந்த அரசு ஒவ்வொரு கல்லூரியிலும் ஓரளவு விளைநிலம் வைத்திருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதற்கும் மூலக் கேள்விக்கும் நேரடித் தொடர்பு இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று செயிண்ட் ஜோசப் கல்லூரியில் இருக்கின்ற முறை வரவேற்கத்தக்க முறைதான். அவ்வாறு எல்லாக் கல்லூரிகளிலும் வைக்கவேண்டுமென்று வற்புறுத்தமுடியாது. ஏனென் றால் ஆங்காங்கு கிடைக்கின்ற வசதிகளைப் பொறுத்தும் அந்தந்தக் கல்லூரிகளில் இருக்கிறவர்கள் தரும் ஊக்கத்தைப் பொறுத்தும், மாணவர்கள் அதிலே காட்டுகின்ற நல்ல ஆர்வத்தைப் பொறுத்தும்தான் அது அமையமுடியும். அதற்கான வாய்ப்பு கூறுகள் இருந்து இந்தமுறையை பின்பற்றுவார்களானால் அதன் மூலமாக செலவைக் குறைக்க முடியும். பொதுவாக இது மாணவர்களுக்கு நலம் பயக்கத்தக்கதாகத்தான் இருக்கும்.

Tiruchirappalli–Tiruchendur Express buses

*** 195 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to ply Government Express buses from Tiruchirappalli to Tiruchendur, via. Madurai, Tirunelveli, Satankulam and Udangudi ?**

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. டி. மார்டின் : திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கமும், நெல்லை மாவட்டத்திலுள்ள திருச்செந்தூரும் முக்கியமான இடங்களாக கருதப்படுகிற காரணத்தால் இந்த இரண்டு ஊர்களையும் நேரடியாக இணைக்கக்கூடிய துரித பஸ் போக்குவரத்தை நடப்பு ஆண்டிலாவது விடுவதற்கு இந்த அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த இரண்டு க்ஷேத்திரங்களையும் ஒன்றாக இணைக்கவேண்டுமென்பது குறிக்கோள் அல்ல. ஆனால் உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற உடன்குடி, திருச்செந்தூர் ஆகிய இடங்களை இணைத்து நாகர்கோயிலிலிருந்து இராமநாதபுரத்திற்கும், நாகர்கோயிலிலிருந்து கோயம்புத்தூருக்கும் இடையே விட எண்ணியுள்ள கடுவிசைப் பேருந்துகள் பற்றிய செயற்குறிப்புகள் இப்பொழுது இருக்கின்றன. அவர் குறிப்பிடுவதைப்பற்றி இப்பொழுது யோசிப்பதற்கு நம்மிடத்தில் " சாவிஸ் " இல்லை.

(திரு. மு. ச. சிவசாமி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருச்சிராப்பள்ளிக்கும் திருச்செந்தூருக்கும் இடையே பேருந்து விடுவது பற்றித் துணைக்கேள்வியொன்றை திரு. எம்.எஸ். சிவசாமி அவர்கள் கேட்கலாம்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, நாகர்கோயிலிலிருந்து இராமநாதபுரத்திற்கும், நாகர்கோயிலிலிருந்து திருச்செந்தூருக்கும் துரித பஸ் விடுவதாக 'ப்ரபோசல்' இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி ஆலோசனையில் இருக்கும் ரூட்டைப் பொறுத்த வரையில், இப்பொழுது துரித பஸ் இல்லாத விளாத்திக்குளம், நாகலாபுரம் வழியாக விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாகர்கோயிலிலிருந்து இராமநாதபுரம் செல்லுகின்ற கடுவிசைப் பேருந்து—வள்ளியூர், நாங்குனேரி, திசயன்விளை, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி, குறுக்குசாலை, விளாத்திகுளம், சாயல்குடி, உத்திரகோசமங்கை ஆகிய ஊர்களின் வழியாகச் செல்லும். நாகர்கோயிலிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் கடுவிசைப் பேருந்து—வள்ளியூர், திசயன்விளை, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி, குறுக்குச்சாலை, எட்டயபுரம், அருப்புக்கோட்டை, மதுரை, கோடைச்சாலை, திண்டுக்கல், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி வழியாகச் செல்லும்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, இந்த விரைவு வண்டிகள் எந்த அடிப்படையில் விடப்படுகின்றன—மக்கள் கோரிக்கையின் அடிப்படையிலா அல்லது ஆர்.டி.ஓ. வேண்டுகோளை வைத்து செய்யப்படுகிறதா என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விரைவு வண்டிகள் மக்கள் விரைவாகப் பயணம் செய்ய வேண்டும் என்றுதான் விடப்படுகின்றன. மக்கள் கோரிக்கையின் அடிப்படையில்தான் விடப்படுகின்றன.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் முன்னாள் அமைச்சரும், இன்னாள் உறுப்பினருமானவர் விரைவு வண்டிகளை பொதுமக்கள் விறகு வண்டிகள் என்று படிக்கிறார்கள் என்றும், அதை மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்களே, அந்தப் பெயரை மாற்றி எழுத அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி ஒன்றும் சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

Uniforms to State Transport Department Workers

* 196 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that Government have decided to provide khaki (mill made) uniforms to the workers in Government Transport Department instead of khadi khaki uniforms ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை. கதருக்குப் பதிலாக காக்கி மில்துணி கொடுக்கப்படவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. வினாயகம் : காக்கி மில் துணி வேண்டும் என்று அங்கே வேலை செய்யும் கண்டக்டர்கள், ட்ரைவர்கள் கோரிக்கை விட்டார்களா ? எதற்காக அப்படி வேண்டும் என்று சொல்லுகிறார்கள் ? அவர்களுக்கு என்ன லாபம் ? கதரை ஏன் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசு போக்குவரத்துப் பணியாளர்கள் கதர்த்துணிகள் நீடித்து உழைப்புக் கொடுக்கவில்லை, விரைவில் கசங்கி விடுகின்றன, ஆகவே, கதர்த் துணிக்குப் பதில் காக்கி மில் துணி வேண்டும் என்று கேட்டார்கள். கதருக்குப் பதில் மில் துணி கொடுப்பது உசிதம் இல்லை என்று கருதி, அதற்குப் பதிலாக கைத்தறி துணியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லி அந்த வகையில் கொடுக்கப்படுகிறது. அந்த வகையில் போக்குவரத்துத் துறைக்கும் 2,16,000 ரூபாய் மிச்சம் ஆகிறது.